சிபாதி 3/5/2/1 2017.03.23

உள்ளக சுற்றறிக்கை இல 02/2015(III)

மேலதிகபணிப்பாளர் நாயகம்,
சகல பணிப்பாளர்கள் / பிரதிப் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள்,
சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான உத்தியோகத்தர்கள்
சகல படைப்பிரிவுகளுக்கும் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள்,
பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.

**அரசாங்க நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குதல் மற்றும் பட்டியல்களை தீர்த்தல்**

மேற்படி விடயம் குறித்து வெளியிடப்பட்ட இல 02/2015 மற்றும் 2015.02.16 ஆம் திகதிய ,இல 02/2015(I) மற்றும் 2015.05.12 ஆம் திகதிய, இல 02/2015(II) மற்றும 2016.05.12 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கைகள் தொடர்பிலாகும்.

02. 2017 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் தொலைபேசி மற்றும் தொடர்பாடல் ஊடாகங்களுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டிருப்பதனாலும் சகல படைப் பிரிவுகளும் இணையத்தள வசதியைப் பெற்றுக்கொண்டிருப்பதனாலும் மேற்படி சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘படைப் பிரிவுகளுக்குப் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் பயிற்சிப் பாடசாலை கட்டளையிடும் அதிகாரிகளுக்கு உச்ச செலவு எல்லை’’ விதிக்கப்பட்டிருந்த பந்தி பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

‘‘படைப் பிரிவுகளுக்குப் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் பயிற்சிப் பாடசாலை கட்டளையிடும் அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த உச்ச செலவு எல்லை, ஏற்புடைய தொலைபேசி அலுவலக பொது தொலைபேசியொன்றாக கருதப்பட்டு தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் இணையத்தள வசதிகளுக்கான தொகை மற்றும் வரித் தொகை உள்ளடங்களாக 9500.00 ரூபாவாகவும் கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு 4500.00 ரூபாவாகவும் அதிகரிக்கப்படுகின்றது’’

03. திணைக்களத்திற்குள் இடம்பெறும் கடிதத் தொடர்புகளை மின்னஞ்சல் மூலமாக மேற்கொள்ளுமாறு அறியத்தருவதோடு தொலை நகல் பாவனையை குறைத்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

04. இந்த சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட ஏற்பாடுகள் 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் ஏற்புடையதாகும். இல 02/2015, 02/2015(I) மற்றும் 02/2015(II) ஆகிய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் அவ்வாறே நடைமுறையில் இருக்கும்.

**சந்திரரத்ன பல்லேகம**

**பணிப்பாளர் நாயகம்**

பிரதி 1. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு.